# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை–600 032.
தொலைபேசி: 044–22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

**********

**தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை–600 032**
**முன்னிலை: முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ),**

**********

**முறையீட்டு மனு எண்.112/2019/பே**
**ஆணை நாள்: 30–09–2019**

**திரு. வை. .ராமச்சந்திரன்,**
**த/பெ திரு.வைத்தி,**
**எண்.19, இரட்டை பிள்ளையார் கோவில் தெரு,**
**மேல் புவனகிரி,**
**கடலூர் மாவட்டம்.** -- **முறையீட்டு மனுதாரர்.**

**செயல் அலுவலர்,**
**புவனகிரி பேரூராட்சி,**
**கடலூர் மாவட்டம்.** -- **எதிர் மனுதாரர்.**

**ஆணை.**

கடலூர் மாவட்டம், கதவு எண்.19, இரட்டை பிள்ளையார் கோவில் தெரு, புவனகிரி பேரூராட்சிப் பகுதியினைச் சேர்ந்த திரு.வை. ராமச்சந்திரன், த/பெ. திரு.வைத்தி, என்பவரது 05.07.2019 நாளிட்ட முறையீட்டு மனு, இம்முறைமன்ற நடுவத்தில் 08.07.2019 அன்று பெறப்பட்டு, முறையீட்டு மனு எண்.112/2019 என எண்ணிடப்பட்டது. மேற்படி முறையீட்டு மனு மீதான அறிக்கைகள் பெறப்பட்டு, விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு, பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

முறையீட்டு மனுதாரர் தனது முறையீட்டு மனுவில், கடலூர் மாவட்டம், புவனகிரி பேரூராட்சி செயல் அலுவலர் திரு.திருஞானசம்பந்தம், 2018–ஆம் ஆண்டு சிதம்பரம் நாடாளுமன்ற தொகுதி மேம்பாட்டு நிதியில் அனுமதிக்கப்பட்ட உயர் மின் கோபுர விளக்கினை புவனகிரி அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளி அருகில் அமைப்பதற்கு பதில் தனி நபரான திரு.உமாமகேஸ்வரன் என்பவரது வீட்டின் அருகில் அமைத்துள்ளதாகவும், இது குறித்து தான் நிருபராக பணிபுரியும் அரசியல் ஒற்றன் மற்றும் அரசியல் மாத இதழ் புத்தகத்தில் செய்தி வெளியிட்டதால் தன் மீது காழ்ப்புணர்ச்சி கொண்டு 26.04.2019 அன்று தனது வீட்டின் குடிநீர் இணைப்பினை துண்டித்துள்ளதாக தெரிவித்து விசாரணை கோரி தனது முறையீட்டு மனுவினை இம்முறைமன்ற நடுவத்தில் சமர்ப்பித்துள்ளார்.

மேற்படி முறையீட்டு மனுவின் மீது உரிய தல ஆய்வு மேற்கொண்டும், புவனகிரி பேரூராட்சி அலுவலக ஆவணங்களை ஆராய்ந்தும் உரிய அறிக்கையினை சமர்ப்பிக்கத் தெரிவித்து, கடலூர் மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநருக்கு, 2014–ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் சட்டம், பிரிவு 6(4) (a)ன் கீழ் 16.07.2019 நாளிட்ட அறிவிப்பாணை மூலம் ஆணையிடப்பட்டதைத் தொடர்ந்து, கடலூர் மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநர், தனது

09.08.2019 நாளிட்ட கடிதத்தில், மேற்படி முறையீட்டு மனுதாரரின் புகார் மனுவில் தெரிவித்துள்ள குற்றச்சாட்டு தொடர்பாக 06.08.2019 அன்று முறையீட்டு மனுதாரரிடம் விசாரணை மேற்கொண்டதாகவும். மேற்கண்ட விசாரணையில் முறையீட்டு மனுதாரர் பொது நலன் பயன்பாட்டை கருத்தில் கொண்டு, பொது நலன் (உயர் மின் கோபுர விளக்கு) கருதி பள்ளி மாணவ, மாணவியர்களின் நலனைக் கருதியும் செய்தி வெளியிட்டதால், தன்னையும் தனது குடும்பத்தையும் கொலை செய்யத் தூண்டும் வகையில் அசிங்கப் படுத்தி, கேவலமாக போஸ்டர் ஒட்டியுள்ளதாகவும், தனிப்பட்ட காழ்ப்புணர்ச்சி தொடர்பாக தன் வீட்டு குடிநீர் இணைப்பின்ன துண்டித்துள்ள புவனகிரி பேரூராட்சி செயல் அலுவலர் மீது துறை ரீதியான நடவடிக்கை எடுக்க தனது வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளதாக கடலூர் மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநரின் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி வாக்குமூலத்தின் அடிப்படையில் புவனகிரி பேரூராட்சி செயல் அலுவலரிடம் விசாரணை மேற்கொண்டதில், கடலூர் மாவட்டம், புவனகிரி பேரூராட்சிக்குட்பட்ட ASR. நகர் மற்றும் அருந்ததியர் தெரு பகுதி பொதுமக்கள் சிதம்பரம் நாடாளுமன்ற உறுப்பினரிடம், அப்பகுதியில் அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளி, அரசு கால்நடை மருத்துவமனை, டாக்டர் ஞானம் மருத்துவமனை, கரூர் வைசியா வங்கி மற்றும் ATM ஆகியவை அமைந்துள்ளதால், அப்பகுதியில் உயர் மின் கோபுர விளக்கு அமைக்க 10.07.2018 நாளிட்ட மனுவில் கோரிக்கை வைத்ததாகவும், இதனைத் தொடர்ந்து சிதம்பரம் நாடாளுமன்ற உறுப்பினர் தனது தொகுதி மேம்பாட்டு நிதியில் 2018–19 ஆம் நிதியாண்டில் மேற்படி பணிக்கு ரூ.9.70 லட்சம் நிதி ஒதுக்கீடு செய்துள்ளதாகவும். இதனடிப்படையில் மேற்படி பணிக்கு கடலூர் மாவட்ட ஆட்சியரின் 13.08.2018 நாளிட்ட ஆணை மூலம் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டு, 06.09.2018 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதாகவும், மேற்படி ஒப்பந்தப்புள்ளியில் இரு ஒப்பந்ததாரர்கள் முறையே M/s. Sri Surya Traders மற்றும் M/s. Valli Constructions ஆகிய நிறுவனங்கள் கலந்து கொண்டதாகவும்,. இதில் குறைந்த விலைப்புள்ளி அளித்த வள்ளி கன்ஸ்டக்ஷன்ஸ் நிறுவனத்திற்கு 10.09.2018 அன்று பணி உத்திரவு வழங்கப்பட்டதாகவும், பணிகள் முடிக்கப்பட்டு, பொறியியல் பிரிவினரால் அளவு, மேலளவுகள் மேற்கொள்ளப்பட்டு பட்டியல் தொகை வழங்கப்பட்டதாகவும், இதன் மூலம் மேற்படி பாராளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியில் பரிந்துரை செய்த அரசு பெண்கள் மேல்நிலைப்பள்ளி அருகில் ASR. நகர், அருந்ததியர் தெரு, மற்றும் புவனகிரி–குறிஞ்சிப்பாடி இணையும் இடத்தில் அப்பகுதி பொதுமக்கள் பயன்பெறும் வகையில் உயர் மின் கோபுர விளக்கு அமைக்கப்பட்டு தற்போது நல்ல நிலையில் ஒளிர்வதாகவும், அப்பகுதி பொதுமக்கள் சிதம்பரம் நாடாளுமன்ற உறுப்பினரிடம் தாங்கள் கோரிய இடத்தில் உயர் மின் கோபுர விளக்கு அமைக்கப்பட்டுள்ளது என 30.04.2019 அன்று கடிதம் கொடுத்துள்ளதாகவும், மேற்படி உயர் மின் கோபுர விளக்கு அமைத்தது தொடர்பாக இதுவரை எந்த ஒரு புகாரும் பெறப்படவில்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், அரசியல் ஒற்றன் மார்ச் மாத 2019 இதழில் 14.03.2019–ல் செய்தி வெளியானதிலிருந்து மனுதாரரும், அரசியல் ஒற்றன் பத்திரிக்கை நிருபருமான திரு.வை. ராமச்சந்திரன் என்பவரை, புவனகிரி பேரூராட்சி செயல் அலுவலரும், இப்புகாரில் தெரிவிக்கப்பட்டுள்ள இதர பணியாளர்களும் இதுநாள் வரை பார்த்ததில்லை எனவும், இந்நிலையில் அவர் மீது கொலை மிரட்டல் விடுவதற்கு எவ்வகையிலும் சாத்தியமில்லாத பொய்யான தகவல்களை பத்திரிக்கையில் பிரசுரம் செய்வதுடன், தொடர்ந்து புகார்கள் அளித்த வண்ணம் உள்ளதாகவும், மேற்கண்ட உயர் மின் கோபுர விளக்கு அப்பகுதி பொதுமக்களின் கோரிக்கைக்கிணங்க உரிய விதி முறைகளின்படி அமைக்கப்பட்டுள்ளது எனவும், இந்த உயர் மின் கோபுர விளக்கு அமைத்தது தொடர்பாக அப்பகுதி மக்களிடமிருந்து நாளது தேதி வரை எவ்வித புகாரும் வரப்பெறவில்லை எனவும், தனி நபர் காழ்ப்புணர்ச்சி காரணமாக மனுதாரரால் உண்மைக்கு புறம்பாக புகார் தெரிவிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், மனுதாரர் தனது வீட்டின் குடிநீர் இணைப்பினை எவ்வித முன்னறிவிப்புமின்றி துண்டித்துள்ளதாக தெரிவித்துள்ள புகார் தொடர்பாக மேற்படி குடிநீர் இணைப்பு, கடலூர் மாவட்டம், புவனகிரி பேரூராட்சி, இரட்டை பிள்ளையார் கோவில் தெருவில் வசிக்கும் திரு.ஜி.கோவிந்தராஜ் என்பவரின் பெயரில் உள்ள இணைப்பு எனவும், (குடிநீர் இணைப்பு எண். 882) மேற்படி குடிநீர் இணைப்பிற்கு குடிநீர் கட்டண நிலுவைத் தொகை ரூ.3,400/– செலுத்தப்படாமல் நிலுவையில் உள்ளதாகவும், இதனைத் செலுத்தக் கோரி 7 நாள், 3 நாள் மற்றும் 1 நாள் அவகாசம் அளித்து, முறையே 04.04.2018, 12.04.2018 மற்றும் 15.04.2018 ஆகிய நாளிட்ட அறிவிப்புகளை பேரூராட்சிப் பணியாளர்கள் நேரில் சென்று அளித்தும், கட்டணம் செலுத்தாததால் அக்குடிநீர் இணைப்பு தற்காலிகமாக துண்டிப்பு செய்யப்பட்டதாகவும், வீட்டின் உரிமையாளர் உரிய கட்டணத்தை செலுத்தும் பட்சத்தில் குடிநீர் இணைப்பு மீண்டும் வழங்கப்படும் எனவும், முறையீட்டு மனுதாரரின் 06.08.2019ம் தேதிய வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளவாறு, மனுதாரருக்கு எதிராக புவனகிரி பேரூராட்சி நிர்வாகத்தால் சுவரொட்டிகள் ஏதும் ஒட்டப்படவில்லை எனவும், ASR நகர், அருந்ததியர் தெரு பகுதி பொதுமக்களால் மேற்படி சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளதாகவும், முறையீட்டு மனுதாரரின் புகாரில் தெரிவித்துள்ள உயர் மின் கோபுர விளக்கு அமைக்கப்பட்டுள்ள இடத்தினை நேரடி கள ஆய்வு மேற்கொண்டதில், கடலூர் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களால் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளவாறு, புவனகிரி அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளி அருகில் உயர் மின் கோபுர விளக்கு அமைக்கப்பட்டுள்ளது எனவும், மனுதாரர் குடியிருந்து வரும் வீட்டின் உரிமையாளர் திரு.ஜி.கோவிந்தராஜ் என்பவரின் பெயரில் உள்ள குடிநீர் இணைப்பிற்கு மாதாந்திர குடிநீர் கட்டணம் ரூ.3,400/– செலுத்தப்படாமல் நிலுவையில் இருந்த காரணத்தினால்தான் புவனகிரி பேரூராட்சி செயல் அலுவலரால் உரிய அறிவிப்புகள் வழங்கியும் குடிநீர் கட்டணம் செலுத்தாததால் மேற்படி குடிநீர் இணைப்பு தற்காலிகமாக துண்டிப்பு செய்யப்பட்டுள்ளது என்பதும் ஆவணங்களை ஆய்வு செய்ததின் அடிப்படையில் தெரியவந்ததாகவும் கடலூர் மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் தெரிவித்துள்ளார்.

இம்முறைமன்ற நடுவ 06.08.2019 நாளிட்ட அழைப்பாணையின்படி, 25.09.2019 அன்று இம்முறைமன்ற நடுவத்தில் ஆஜரான முறையீட்டு மனுதாரர் திரு.வை.ராமச்சந்திரன் தனது வாக்குமூலத்தில் தான் அரசியல் ஒற்றன் மாத இதழில் உள்ளூரில் ரிப்போர்ட்டராக பணிபுரிவதாகவும், தனக்கு மாத ஊதியம் எதுவும் இல்லை எனவும், தனது நாளிதழ் செய்தி மூலம் தான் தவறு செய்திருந்தால் அவை முழுவதும் பத்திரிக்கையினையே சாரும் எனவும், புவனகிரி பேரூராட்சி செயல் அலுவலர் உள்ளூர் ஆட்களை ஏவி விட்டு அனைத்துக் கட்சித் தலைவர் என்ற பெயரில் தன் மீது புகார் அளித்துள்ளதாகவும், பெண்கள் மேல்நிலைப் பள்ளி அருகில் அமைக்கவேண்டிய உயர் மின் கோபுர விளக்கினை தனி நபரிடம் விற்று விட்டதாகவும், இது குறித்து தனது பத்திரிக்கையில் செய்தி வெளியிட்டதால் பேரூராட்சி ஊழியர்களை வைத்து தன்னை குப்பை லாரி ஏற்றி கொலை செய்து, மோட்டார் வாகனச் சட்டத்தின்படி "விபத்து" என்று சொல்லி திசை மாற்றிவிடுவோம் ஜாக்கிரதை, என பேரூராட்சி செயல் அலுவலர் மிரட்டியதாகவும், மேலும், இதன் காரணமாக தனது வீட்டு குடிநீர் இணைப்பினை பேரூராட்சி துண்டித்து விட்டதாகவும், புவனகிரி பேரூராட்சியில் குறைந்த பட்சம் ரூ.37.00 லட்சம் வரை குடிநீர் கட்டணம் நிலுவையில் உள்ளதாகவும், இதுவரை யாருடைய குடிநீர் இணைப்பினையும் துண்டிக்கவில்லை எனவும் தனது வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளார்.

இம்முறைமன்ற நடுவ 06.08.2019 நாளிட்ட அழைப்பாணையின்படி 25.09.2019 அன்று இம்முறைமன்ற நடுவத்தில் ஆஜரான கடலூர் மாவட்டம், புவனகிரி பேரூராட்சி செயல் அலுவலர் திரு.திருஞானசம்பந்தம் தனது வாக்குமூலத்தில், முறையீட்டு மனுதாரர் அரசியல் ஒற்றன் என்ற இதழில் ரிப்போர்ட்டராக பணிபுரிவதாகவும், அந்த இதழ் வெளியானவுடன் முதல் பிரதியினை எடுத்துக் கொண்டு பேரூராட்சி அலுவலகம் வந்து ரூ.500/– கேட்பதாகவும், இத்தொகைக்கு குறைவாக கொடுத்தால், தனது இதழில் பேரூராட்சியால் கோரப்படும் ஒப்பந்தப்புள்ளிகளுக்கான விளம்பரங்களை பிரசுரிக்க கோருவார் எனவும், இடையிடையே வந்து அவரின் இரு சக்கர பெட்ரோல் வாகனத்திற்கு பெட்ரோல் போடுவதற்கும்,

எப்போது வெளியில் சென்றாலும் அலுவலகம் வந்து பணம் கேட்பார் எனவும், அவர் கேட்கும் பணத்தை கொடுக்காவிட்டால் தனது பத்திரிக்கையில் தவறான செய்திகளை வெளியிடுவதை வழக்கமாக கொண்டுள்ளார் எனவும் தெரிவித்துள்ளார். இது குறித்து புவனகிரி காவல் நிலையத்தில் புகார் அளித்துள்ளதாகவும், இணைய தளம் மூலம் மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளருக்கும் புகார் அளித்துள்ளதாகவும், மனுதாரர், அவருக்கு சாதகமாக தான் நடக்காத நிலையில் தான் பணிபுரிந்துள்ள இடங்களில் எல்லாம் ஒரே இரவு நேரத்தில் தன்னைப் பற்றி அவதூறாக சுவரொட்டிகள் ஒட்டி தன்னை மிகவும் மன உளைச்சலுக்கு ஆளாக்கியுள்ளதாகவும், மேற்படி முறையீட்டு மனுதாரரை தானோ, தனது அலுவலக பணியாளர் எவரும் எவ்வித மிரட்டலும் விடுக்கவில்லை எனவும், மேற்படி மனுதாரர் குடியிருக்கும் வீட்டிற்காக நிர்ணயிக்கப்பட்டிருக்கும் குடிநீர் கட்டணம் ரூ.3,400/– செலுத்தப்படாத காரணத்தினால் மேற்படி வீட்டு உரிமையாளருக்கு மூன்று விதமான அறிவிப்புகள் முறையே 7 நாள், 3 நாள் மற்றும் 24 மணி நேர அவகாசம் அளித்து அறிவிப்புகள் சார்வு செய்யப்பட்டதாகவும், இது போன்று மற்ற நபர்களுக்கும் அறிவிப்புகள் சார்வு செய்யப்பட்டுள்ளதாகவும், அவ்வாறு அறிவிப்புகள் சார்வு செய்யப்பட்ட பின்னரும் குடிநீர் கட்டணம் செலுத்தாத நபர்களின் குடிநீர் இணைப்புகள் துண்டிக்கப்பட்டுள்ளதாகவும். புகாரில் தெரிவிக்கப்பட்ட உயர் மின் கோபுர விளக்கு சிதம்பரம் நாடாளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியில் இருந்து அவரால் பரிந்துரை செய்யப்பட்ட இடத்தில் அமைக்கப்பட்டுள்ளதாகவும் அவரால் பரிந்துரை செய்யப்பட்ட இடங்களை கடலூர் மாவட்ட ஆட்சியருக்கு சமர்ப்பிக்கப்பட்டு, மாவட்ட ஆட்சியரின் நிர்வாக அனுமதி பெற்று, நிர்வாக அனுமதியில் உள்ள நிபந்தனைகளின்படி வெளிப்படையான ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில், இரு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டு, இதில் குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்த வள்ளி கன்ஸ்ட்ரக்ஷன் என்ற நிறுவனம் மதிப்பீட்டுத் தொகையில் 0.06% குறைத்துக் கோரியதாகவும், இரண்டாவது ஒப்பந்தப்புள்ளி அளித்த சூர்யா டிரேடர்ஸ் மதிப்பீட்டிற்கு மேல் 0.01% கோரியிருந்ததால், குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்த நிறுவனத்திற்கு பணி ஆணை வழங்கப்பட்டதாகவும், இதில் எவ்வித முறைகேடும் நடக்கவில்லை எனவும் தெரிவித்ததுடன், குடிநீர் கட்டணம் செலுத்தாமல் இருந்த 16 நபர்களின் குடிநீர் இணைப்பு துண்டிப்பு செய்யப்பட்ட விவரத்தினையும் சமர்ப்பித்துள்ளார். உயர் மின் கோபுர விளக்கு அமைக்கப்பட்டுள்ள இடத்தில் உள்ள பொதுமக்கள் மனுதாரர் தங்களுக்கு எதிராக செயல்படுவதால் மனுதாரரை கண்டித்து சுவரொட்டிகள் ஒட்டியதுடன், துண்டு பிரசுரங்கள் விநியோகமும் செய்துள்ளனரென்பதையும் மேற்படி பணி குறித்து முறையீட்டு மனுதாரரை தவிர வேறு யாரும் எந்த புகாரும் அளிக்கவில்லை எனவும், முறையீட்டு மனுதாரர் குடியிருக்கும் வீட்டின் உரிமையாளருக்கு குடிநீர் இணைப்பினை துண்டிப்பு செய்யும் முன் அளித்த அறிவிப்பு நகலினையும் சமர்ப்பித்துள்ளார்.

இந்நேர்வில் முறையீட்டு மனுதாரரின் முறையீட்டு மனு, முறையீட்டு மனு தொடர்பாக கடலூர் மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநரின் தல ஆய்வறிக்கை, முறையீட்டு மனுதாரர் மற்றும் புவனகிரி பேரூராட்சி செயல் அலுவலர் ஆகியோர்களின் வாக்குமூலங்கள் ஆகியன பரிசீலிக்கப்பட்டன. புகாரில் தெரிவிக்கப்பட்ட உயர் மின் கோபுர விளக்கு சிதம்பரம் நாடாளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியில் பரிந்துரை செய்த இடத்தில் கடலூர் மாவட்ட ஆட்சியரின் நிர்வாக அனுமதியின் பேரில், உரிய விதிமுறைகளின்படி ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு அமைக்கப்பட்டதாக பேரூராட்சிகளின் உதவி இயக்குநரின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் முறையீட்டு மனுதாரர் குடியிருக்கும் வீட்டின் உரிமையாளரால் குடிநீர் கட்டணமாக ரூ. 3,400/– செலுத்தப்படாத காரணத்தினால் அவருக்கு முறையாக அறிவிப்புகள் வழங்கப்பட்டும், மேற்படி நிலுவைக் கட்டணத்தினை செலுத்தாததால் பேரூராட்சி மூலம் மேற்படி குடிநீர் இணைப்புகளும் தற்காலிகமாக துண்டிப்பு செய்யப்பட்டுள்ளதாகவும், இது போன்று குடிநீர் கட்டணம் செலுத்தாத பிற நபர்களின் குடிநீர் இணைப்பு துண்டிப்பு செய்யப்பட்டமைக்கான விவரங்களும் பேரூராட்சி செயல் அலுவரால் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. எனவே முறையீட்டு மனுதாரரின் முறையீட்டு மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ள புகார்களுக்கான போதிய ஆதாரங்களை அளிக்காத நிலையில், கடலூர் மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநரின் தல ஆய்வு அறிக்கை மற்றும் புவனகிரி பேரூராட்சி செயல்

அலுவலரின் வாக்குமூலம் ஆகியவற்னை ஏற்று முறையீட்டு மனுவினை தள்ளுபடி செய்து அவ்வாறே ஆணையிடப்படுகிறது. மேலும் செயல் அலுவலர் கூறியுள்ளது போல் மனுதாரர் பணம் பறிக்கும் நோக்குடன் பேரூராட்சி நிர்வாகத்தில் தலையிட்டு இடையூறு ஏற்படுத்துகிறாரா என்பது குறித்து மாவட்ட நிர்வாகம் கண்காணித்து காவல் துறை மூலம் தக்க நடவடிக்கை மேற்கொள்ளுமாறு தெரிவித்தும் அவ்வாறே ஆணையிடப்படுகிறது.

2019–ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 30 –ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

-//ஒப்பம்//–
**தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.**

**–//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//–**

செயலாளர்.

பெறுநர்
1.திரு. வை. .ராமச்சந்திரன்,
த/பெ திரு.வைத்தி,
எண்.19, இரட்டை பிள்ளையார் கோவில் தெரு,
மேல் புவனகிரி,
கடலூர் மாவட்டம்–608601.
2.செயல் அலுவலர்,
புவனகிரி பேரூராட்சி,
கடலூர் மாவட்டம்–608601.
3.பேரூராட்சிகளின் உதவி இயக்குநர்,
கடலூர் மண்டலம்,
பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் அலுவலகம்,
கடற்கரை சாலை, கடலூர்.607001.
4.மாவட்ட ஆட்சித் தலைவர்,
கடலூர் மாவட்டம்;
கடலூர்.
நகல்
மாண்புமிகு முறைமன்ற நடுவர் அவர்களின் தனி எழுத்தர்.
முறைமன்ற நடுவ செயலரின் தனி எழுத்தர்.
உதவிப் பிரிவு அலுவலர் (ஊராட்சிகள்) தகவலுக்காக.